786

அல்லாஹுல்கரீம்

இஃது

நமதுநாயகம் ஸர்வரே ஆலம் காத்திமுல் அன்பியாஷப்
ஹரல்முத்னபீன் ஹபீப்றப்பில் ஆலமீன்ஸய்யிதுனா
முஹம்மதுநபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
அவர்கள்மீதிற்பாடிய

நவனீத முனாஜாத்துச் சிந்து

முதற்பாகம்.

இதை

கொச்சிஸமஸ்த்தானத்தைச் சேர்ந்த கொழிஞ்சாம்பாறை
நகரில் ஷைகுஇப்றாஹீம் றாவுத்தர் குமாரரும் மேல்படி
நகரில் மதர்ஸா உஸ்தாதுமாகிய

முஹம்மதுக்கனிறாவுத்தறால் இயற்றியதை

மேற்படி நகரில் போஸ்ட்டுமாஸ்ற்றர்

நா. சிக்கந்தர் றாவுத்தறால்,

பிழையறப்பரிசோதித்து
தனது பொருளினால்

கோயமுத்தூர் விவேகாநந்தா அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

[illegible]] 1924 [விலை 0—3—6

Q7:417
N24
181299

அல்லாஹுல்கரீம்

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் யாபேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், யானாகிய மிஸ்கீன் கரீமுடைய உதவியால் இந்நவநீத முனாஜாத்துச் சிந்து முதற்பாகம் என்ற இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியாக்கியிருக்கிறேன். இன்ஷா அல்லாஹு இதின் இரண்டாம்பாகமும் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

இந்நவநீத முனாஜாத்துச் சிந்து முதற்பாகத்தை இந்தியன் காப்பிரிஜிஸ்தர் செய்திருப்பதால் எனது உத்தரவன்றி இப்புத்தகத்தை யாவது அல்லது இதை வேறு பாஷையிலாவது அச்சிடுபவராயின் யான் கோரும் நஷ்டத்திற்கு ஜவாப்தாரி யாவார்களென்று இந்த விளம்பரத்தைக்கொண்டு தெரிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

கொ. செ. முஹம்மதுகனி.

இப்புத்தகம் ஒருடஜனுக்கு குறைவில்லாமல் வாங்குபவர்களுக்குடஜனுக்கு இரண்டு புஸ்தகம் இம் கொடுக்கப்படும்.

இதன் விலை 0—3—6

வியாபாரிகளுக்கு சரசமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

எனது விலாசம்.

கோ. செ. முஹம்மத்கனி ராவுத்தர்,
மதர்ஸாஉஸ்தாது.
கொழிஞ்சாம்பாறை, பாலக்காடு

சாற்றுக்கவி.

கொச்சி ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த கொழிஞ்சாம்பாறை நகரில் நாகூர் மீரூருவுத்தர் குமாரரும் மேற்படி நகரில் போஸ்ட்மோஸ்டருமாகிய சிக்கந்தர்ரூவுத்தர் இயற்றியது.

திருவிருத்தம்.

திருமுஹம்மதுநபிமேற் செந்தமிழாலிங்கிதமாய்க்
கருமுகில்நேர்நவநீதங் கவலமுஞ்ஜாத்துபதம்
பருகுனர்கட்கினிமையெனப் பகர்ந்துளனுங் கொழிஞ்சிநகர்
வருமுஹம்மத்கனுயுமென வரிசையுரும்பேருளனே.

சாற்றுக்கவி.

ஐயூபுநபீகாவியகிரந்த கர்த்தாவும் புலவர்சிகாமணியுமாகிய புதுநகரம் ஸ்ரீமான் ந. ஷைகு அப்துல்காதிர் ரூவுத்தர்குமாரர் ஸ்ரீமான் நத்ஹார்முஹம்மதுரூவுத்தர் இயற்றியது.

இரட்டை ஆசிரிய விருத்தம்

திருவுலவுநீர்வளஞ்செந்நெல்வயல்கன்னல்சேர்
திகழ்மணிகொழித்ததடமார்
தேன்கசிகொழிஞ்சிஷைகிப்ரூஹிம்ரூவுத்தர்
செய்தவத்தோன்றலானோன்
மருமலர்ப்புயனெவரு மதிகொள்ரஞ்சிதக்கவிகண்
வருஷிப்பனறபிமொழிநேர்
மலிமுஹம்மதுகனி சொநவநிதமுஞ்ஜாத்து
வளர்சிந்தினிசைபல்ருகத்
தருள்பெருகவினிதுரைத்தான் றனதுநிதியுதவி
தாணிபுகழச்சியற்றி
தாரணிப்பாவலர்க ளுவலர்புகழ்ந்திடத்
தனியனருள்பெருகநாளும்
பேர்பெருகுநபிகழல்கண் சென்னிமிசைகொண்ட
நற்றெருண்டனிக் கவியுரைத்தோன்
புதுநகரிலுறைசிகாமணிப் பாவலர்தோன்றல்
[illegible]நத்ஹார்முஹம்மதே

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிற்றஹீம்.
அல்லாஹுல்கரீம்

நவனீதமுனஜாத்துச் சிந்து.

முதற்பாகம்.

நேரிசைவெண்பா.

மங்குல்கவிகையிடுவெள்ளல்மஹ்மூதரின்மேற்
சங்கீதமோதவரந்தருவா—யிங்குதவி
யாகவுமெனுண்டகையெ அடிமையுனற்கீமானும்
வாகுடன்தந்தருள்புரிவாய்நீ

சந்தவிருத்தம்.

அஹதுவாஹிதுஸமதுவாஜிது வைவலாகியநாயனெ
மஹ்திநாயகமீதுபதமது வாழ்த்தவருள்புரி தூயனெ
இகமிலவர்புகழ்புகலுமனுடர்க ளிடர்கள்தீர்க்குமுபாயனெ
ஜகமில்முஹம்மது கனியின்பவமது தீர்க்குந்தீனதயாளனெ

1—வதுபதம். மன்றுள்ளாடியவா என்றமெட்டு.

பல்லவி.

ஹையுல்க்கய்யூமானவா தூயா (ஹை)

அனுபல்லவி

ஸய்யிதுமுஹம்மதுநபியை வையமில்நற்றாதாகிய (ஹை)

சரணம்.

மெய்யாய் ஆதம் நபியைப்படைத்தவா
மேதினியிலவர் பிழைபொருத்தவா

அய்யர்நபிறாஹை ஆதரித்தாண்டவா
அடிமையினுக் கருள்புரிவா
யஹ்மதர்மேற் கவிகள்சொல (ஹை)

பாதகநம்றூதைப் பாரில்மடித்தவா
பாங்கிலிப்றாஹிமைப் பார்த்தாட்சித்தவா
காதிரென்றதிரு நாமந்தரித்தவா
கரையுகிறேன் றரையதனி
விறையுனையான் சரணடைவான் (ஹை)

வம்பனாபிர்ஔனென்னை மடித்தவா
வள்ளல்மூஸாநபி தன்னையுங்காத்தவ
இன்பமானஜப்பா ரெனும்பேர்தரித்தவா
இகமிசையில் முஹம்மத்கனி
புகலிசையிற் பிசகல (ஹை)

2-வது பதம். நஹிசோபனவாலிகா என்றமெட்டு

கண்ணிகள்.

ஹபீபிறசூலெனுங்காரணநிதியே
காரணநிதியே பூரணமதியே
காட்சிதரவுங்கள் கடாட்சங்கள் கதியே (ஹபீ)
அபூபக்கர்சித்தீக்கருள்மருமகரே
அருள்மருமகரே அப்துல்லாசுதரே
அளிவில்லான் குதரத்தாலமைந்தநற் றாதரை (ஹபீ)
ஓநாய்பேசினதுங்கள் கடாட்சமே
உங்கள்கடாட்சமே பொங்கியமோட்சமே
உலகத்தார்யாவர்க்கும் உரைப்பதுபட்சமே (ஹபீ)
ஏனோஎன்மீதிலிறக்கமேயில்லை
இறக்கமேயில்லை மறக்கவுந்தொல்லை
எத்தீமுங்கள்சலவாத் நத்தினேன்சொல்லை (ஹபீ)
பாலன்முஹம்மத்கனி பகருமிச்சந்தம்

பகருமிச்சந்தம் புகலுமானந்தம்
பத்தியுள்ளோர்கட்கு நத்திடச்சொந்தம் (ஹ்ப)

3-வதுபதம். அப்பாநசெதன்னமலைக்கொப்பாக என்றமெட்டு.

கண்ணிகள்.

மக்காநகரதனி லெக்காலமும்புகழும்
ஹ்க்கன்திருத்தூதாங்களும்—சதுர்மறையின்
மிக்கபுகழ்வினைத்தோரும்
மானிடரெவாரும்
மஹ்மூதரைக்கோரும் (மக்கா)

முத்திலுநித்திநெல் லுத்தமரென்குருவெ
பத்தியுடனேபணிந்தேன்—எனதுவுளம்
நித்தமுருகியுநொந்தேன்
பாவியினைக்கார்த்தும்
பதவியினிற்சேர்த்தும் (மக்கா)

எத்தனையாளுலுமென் குற்றமதைபொருப்பீ
ருத்தமரானவரெ—அடிமையினைப்
பட்சமாயாள்குவீரே
பஞ்சைமுகம்பாரும்
பரிதாபத்தைத்தீரும் (மக்கா)

முத்திரைபூண்டோரும் இத்தரைதீண்டாத்தாரும்
உற்றிடும்சற்குருவெ—உடையோனருள்
பெற்றிடுமெய்த்திருவெ
முற்றுமெமைக்காரும்
மூஹ்ம்மத்கனிகூறும் (மக்கா)

4-வதுபதம் ஓஹோஎன்ன இது என்றமெட்டு

பல்லவி

தா ஹ்ர அஹ்மதுவை
தயவுசெய்தருள் திருஹாமிதுவெ (தா)

அனுபல்லவி

பூகமறியமன வேகமுறவெதின
மாகமறநெதன்குண மாகுதிதுதருணம்
அருள்வரமீய்வீர் குருநபியெ (தா)

சரணம்

ஆதம்நபிதொடுத்து ஐம்தொன்றும்விடுத்து
பூதலமீதடுத்து புருக்கானவேதநடத்தும்
பொங்கும்வரமெங்குப்பிரசங்கமெ (தா)
ஈத்தங்குலையழைத்தீர் எதிருய்மதியுரைத்தீர்
கூத்தனநபியைதீன் குலத்தினிற்சேர்த்தினீர்
கொடுங்காபிரிகுதயங்கரைந்திடவெ (தா)
மாசென்மீதுதுடரு மதிகேடனுகிவிடா
தாசையுடன்பனுவ லறையுமுஹம்மத்கனி
கஹமதரைபிழைபொருத்தருள்வீர். (தா)

5-வது பதம் ஆதிதாளம்

பல்லவி

மதினனகர்வாழும் அரசெ மலர்ப்பதங்கிழென்சிரசெ (ம)

அனுபல்லவி தொடர்சரணம்

அதிபதியாகவந்த அண்ணல்முஹம்மதரெ
அனைவர்க்கும் ஷபாஅத்து அருளும் அஹ்ம்மதரெ
துதிசெய்தேனடிமைநான் துலங்கும்மஹ்மூதரெ
துய்யோன்றிருத்தூதனுய் வையந்தனில்வந்தோரெ (ம)
யாஸீனெனும்சூரத்திலமைந்த புருக்கான்வேதம்
யாரும்புகழுமல்ஹம்தெழுத்தாலமைந்தநீதம்
காஸீமஹ்மூதரைக்கல்பிலுவக்குங்கீதம்
காட்டவுங்களருளைப் பூட்டவின்னந்தாமதம் (ம)

முருஸல்நபிமார்கட்கு முந்தின தாயகமே
முஸ்தபாவானவெங்களுஸ்த்தா துநாயகமே
அருஷில்கபுசோடேற அல்லாகுவின்னேயமே
ஹாஷீங்கிளையில்வந்த காஸீமெனுமிறசூல் (ம

அமரர்கள்போற்றுந்திரு ஹாமீதெனுங்கனியே
அண்டினேனுங்களைத்தொண்டன் யானேதனியே
சமரிலொப்பாரியெனச் சாற்றுமென்பண் இனியே
தயைசெயும் முஹம்மதுகனி கவிக்குதவியே (மதினு)

6-வது பதம் செந்தாழம்பூவுந்தேன்கமழும் என்றமெட்டு

பல்லவி

தந்தாழுவார் செந்தாமரைத்
தாள்பெருநபியார்வரந் (தங்)

அனுபல்லவி

வந்தாழுவாரெனது வள்ளலிறசூல்நயினார்
வரிசைபெற்றிடு மதினமுற்றிடு
வடிவின்மிக்கவ ரஹமதர்வரந் (தங்)

சரணம்

மன்றுடுவாரன்பாய் ஹபீப்
மஹ்ஷரமளியில்நமக்கு—மன்றுடுவார்
குன்றுதவரின்குணம் குலவுங்கஸ்தூரிமணம்
கொத்துமலர்ப்பதம் நத்திடமேநிதம்
சித்தர்துதித்திடும் முத்துமுஹம்மதர் (தங்)
அன்பானவரென்குவதனை
யகற்றுவார்தினம்கிருபை—அன்பா
தெம்புடன்திமிஷ்கிறைமு னம்புவியழைத்ததன்பின்
தீரமுற்றுபகாரவைப்பவர்
தீனவர்புகழ் ஹாமிதுகழல் (தங்)

பூங்காவுகளோங்கியபுகழ்
பெருநகர்மதினாவாசெ—பூங்காவு
தாங்கமுடியாதுயினி—தாசன்சிறுமுஹம்மத்கனி
சற்கவியோது இப்புவிமீது
ஹக்கனின்தாது மக்கமஹ்மூது (தந்)

7-வதுபதம் என் அம்பாள்மதுரைமீனாட்சி என்றமெட்டு

கண்ணிகள்

முழுச் சந்திரனைழத்தசெழுந்தேனே புகழ்
தங்கியசதுர்மறையோனே பல
துன்பங்கங்கள்தீத்தருள்கோனே
துலங்கிடுஞ்சீமானே துலங்கி (முழு)

திருச் சுந்திராப்துல்லாபாலா மதி
பொங்கும்ஆமினார்குணசீலா மறை
தங்கும்மின்னாகதிஜாலோலா
தனியோனிறசூலா—தனி (முழு)

இப் பாதகமேதிடுஞ்சேதி ஜக
மீதினிலுங்கள்பிரக்யாதி சொல
நாவளதோபுவிமீதில்
நயினார்திருநீதி—நயினார் (முழு)

இனி வாதுசெய்வதாகாது கதி
யேதுவும்மையல்லாது எனை
யாதரிப்பீர்புவிமீது
அண்டினேனிப்போது—அண்டி (முழுச்)

கன்னி ஆயிஷாதிருமணவாளா மஹ்
மூதெனும்புகழிறைதோளா மனம்
வாடிநொந்தேன்வெகுநாளாய்
முஹம்மத்கனியையாளாய்—முஹ் (முழு)

8-வது பதம் புள்ளிகலாபமயில்பாகன் என்றமெட்டு

கண்ணிகள்

வரிசைபெருவாயடிமானே வள்ளல்
மஹ்மூதரைப்புகழ்வாய்தேனே ஹாஷிம்
வங்கிஷத்தில் பொங்கிநின்ற எங்கள்நபி தங்கள்பதம்
நானே மற வேனே (வரிசை

அருஷில்கபுசோடேறினரே ஹக்கன்
அளவில்பதிலுமுரைத்தாரே நம
தாதிமறைநீதியாக வோதியுமிப்பாரினிலே
கூறே வுளந் தேறே (வரிசை

மானுக்குப் பிணைநின்றநாதர் குபிர்
மனதைத்திருத்தும் நவநீதர் காத
வாசமுங்கஸ்தூரியது வீசும்பிரகாசமுள்ள
நீதர் தவ போதர் (வரிசை

ஜகமெங்கும் புகழ்மஹ்மூதே நான்
செப்புங்கவிக்கருள் ஹாமீதே பதம்
தித்திக்கும் முஹம்மதக்கனி யுத்திக்கும் வாமதையிப்
போதே தரும் வேதே (வரிசை

9-வது பதம் பட்டாபிஷேகம் என்றமெட்டு

கண்ணிகள்

பூமிதனிலுறும் மாமதீனநகர்
நேமமுடனாண்ட ஹாமீதரசே
தாமதமென்னசொல்வீர் கதீஜா மாமன்னரே புகல்வீர்
தாள்பணிந்தேன் ஏழைநொந்தேன்
நாளைமன்றுடிவீரே (பூமி

காப் ஹா யா ஐன்ஸா தெனுமைந்தெழுத்தால்
வாகாயமைந்திட்ட வள்ளலிறசூலெ
வியாகுலமாய்நொந்தேனெ துக்க சாகரத்தில் வீழ்ந்தேனெ
அலைவுபட்டேன் கவலையுற்றேன்
அஹமதெனும் நாதரெ (பூமி

அல்லா திருவேதம் எல்லாமனிதர்க்கும்
நல்லவழியாக சொல்லவந்தகுரு
ஸல்லல்லாநாயகமெ ஹபீ பிறசூலுல்லா தாயகமெ
சாற்றினனெ ஏற்றினனெ
இச்சகத்தில முஹம்மதக்கனியெ (பூமி

10-வதுபதம்: ஒதிருநல்லூர்வளரொய்யாரா என்றமெட்டு

கண்ணிகள்

ஆதறவைக்கார்த்துயிருப்பேனன் மக்கா
அண்ணலரின் தோத்திரம்விண்டேனன் ஐய
மாகிடவெபூவதிற்றனய் வரும்
அடிமையினுக்கினிமைபெற அஹமதரைத்தெரிசனமுற்
றகிடவெபவமதுவுந்தோண திருக்
தேகிடலாம் சொர்க்கமதிற்றனய் [ஆதற

தூயமலர்ச்சேவடியைத்தாருய் றசூல
நாயகமென்தீவினையைத்தீருய் கெடும்
பேயணிப்லீசுவெனைச்சேரு திருத்
ததுபெருமைப்புதுமையுரும மயில்வடிவத்தவகிதியுற்
றலமதிற்றினின்சிங்காரு அன்
ஸாரிகள்சூழ்ந்திடுமதினஹூரா [ஆத

ஆதிறஹ்மானவனின்றேளா துனி
யாவிலெனைக்கார்த்திடுயென்னுளா கன்னி
ஆயிஷாகதீஜாயிருவர் மணுளா முத
லானவனின் றாதுவரென் மீதருள்என்றேதிடுவன்

அஹம்மதரெனும் புண்யவாளா கவி
புகலுமுஹம்மத்கனியை யாளாய் [ஆத

11-வதுபதம் என்னடிநானபெற்றமங்கை என்றமெட்டு

கண்ணிகள்

வர்ணப்பசுங்கிளிமானெ செழுந்தேனெ மறவேனெ
மக்கா மன்னர்முஹம்மதைத்தானெ வடி
வாயுற்றிடு மாஹித்திரு பேடுற்றொளி வீசிக்குரு
வானஹாமீதெனுங்கோனெ யுமைப்
பூணிப்புடன் புகழ்தேனெ [வர்ண

நொந்தென்னிருதயமாடி யுமைத்தேடி மன்றாடி
வெகு துன்பங்கள்பட்டுமெய்வாடி சத
மாகப்பணியாய்நித்முமேபொற்பதமாயுற்றனன்
மங்கை ஆமினாவின்பாலா புகழ்
தங்கும் ஹலீமாவின்சீலா (வர்ண

வந்தெனையாளுவாய்நீதா மஹ்மூதா இறைதூதா
துதி பொங்கும் சதுர்மறைவேதா புகல்
வோர்நித்தமு மோதிப்பரஞானப்புகழேபெற்றிட
புண்ணியருணநங்நாதா வெகு
கண்ணியமாந்தவபோதா [வர்ண

கொண்டல்நிழல்தரும்நேசர் பிரகாசர் விசுவாசர்
மீது விண்டமுஹம்மத்கனிதாசன் குறை
கூறுதிறைவோனெனெனக்காராய்நிதம் பார்மீதினில்
கொஞ்சிக்கெஞ்சிப்பணிந்தேனெ பேயன்
அஞ்சிப்பறந்திடத்தானெ (வர்ண

12-வதுபதம் தையலெலசையோகம் என்றமெட்டு

பல்லவி

அன்னமெ சொர்ன்னமே மன்னர் முஹம்ம...

சன்னிதிதேடிடுவாய்—நிதம்
கன்னீர் நாடிடுவாய் [அன்ன

அனுபல்லவி

கண்ணின்மணியான ஹாமிதரைப்புகழ்தோடி
பண்பாடி முன்னாடி நீதேடிடு கண்டுநீகொள்வாயடி [அ

சரணம்

அன்றுகவாபிரை வென்றுஇஸ்லாமுண்டாக்கிய
பாக்கிய யோக்கிய வாக்கியராமினுவின்
சுதனார் பாரில்காமிலான வதனார் [அ

தஞ்சமென்றேயுமை அஞ்சலிசெய்குறேன்
தத்துவ உத்தம புத்திரரெ வரந்தந்தாழ
வேணுமையா மலர்ச்செந்தாமரை யின்கையா (அ

மண்டலத்திலுமைக் கொண்டாடுவார்நிதி
யாகிய ஹாமீதெனுந்திரு நாதரையோதுமுஹம்மத்
கனி பிழைபோருத்தாழும்மஹ்மூதேயினி (அ

13-வது பதம். அள்ளியள்ளிக்குடிக்கும் என்றமெட்டு.

கண்ணிகள்

பாத்திபனும்திமிஷ்க்கு போற்றியனுதர்மேல்
பயகாம்பரானநீதர்மேல் நபிநாதர்மேல்—பய
பண்கவியோதி மண்தனில்மீதில்
நெஞ்சினிலெய்து அஞ்சலிசெய்தேன் (பாத்தி

காத்திரமானகுறைஷ் கோத்திரந்தன்னிலெ
காம்பீரமான அண்ணலெ—இம்மண்ணிலெ—கா
சுத்தினேன்நொந்து மெத்தமெலிந்து
சித்தமுனைந்து நத்தினேனுமையை (பா

வாட்டமுடனென்மன நாட்டமுமாகுதெ
வள்ளலிறசூலென் ஹாமிதெ வுள்ளோகுதெ—வ
வந்தருள்நேயம் சொந்தமானீயும்
உந்தன்சகாயம் தந்திடல்ஞாயம் (பா

மாமயிலாடும்மதி னகர்ருசரெ
மாலிக்குல்முலூக்கின்னேசரெ விசுவாசரெ—மா
மன்னர்கள்கோடி சன்னிதிதேடி
பொன்னகர்நாடி தன்னிலெவாடி (பா

பாலன்முஹம்மத்கனி பகரும்சங்கீதமாம்
பாடுவோர்க்குவினோதமாம் நன்னீதமாம்—பாடு
பத்தியாய்ப்பாட நித்தியந்தேட
முத்தியிற்கூட அத்தனைநாட (பா

14-வது பதம் மயிலவடிவேலனென்னோடெதிர்வாவா என்றமெட்டு

பல்லவி

மதியையழைத்தீர் மஹாநபிநாதா—மதியை

அனுபல்லவி

கதியருள்நீதா சதுர்மறைவேதா
ஹபீபிறசூலெனுங்குருநாதா (மதி

சரணம்

பதிமதீனாவில்வாழும்பூமானெ—பதி
துதிசெய்தேன்யானெ புகழும்சீமானெ
துயரமதைதீர்த்திடுவீரென்கோனெ (மதி

பஸீரெனும்பேருடையோன்றசூலா—பஸீ
வஜீக்ரமேலா உமர்புகழ்சீலா
உவந்திடும்ஹலீமாதிருபாலா (மதி

சசிமங்கும்மேனியுடையோரெ
சுசியுறுந்நூரெ புகழ்நயினாரெ
சுதைபாத்திமாவின்தந்தையானோரெ (மதி

றஸூர்றஹீமெனுந்திருநாமம்—றஊ
நபியுல்லாவாமம் முஹம்மத்கனிதாமும்
நாடினபேர்கட்கு சுபக்ஷேமம் (மதி

15-வது பதம் தாயெநமஸ்காரம் என்றமெட்டு

கண்ணிகள்

காமிலேநியோது கதிபெறவிப்போது
பூமிதனில்யாது புலம்பிடுவாய்மாது
புகல்வாய் அமலீது
புரந்தர்குறைஷிக்குலமதனில்பிறந்திடுநற்தூது (காமி

காவலுடன்தேடி கலைந்தென்னகம்வாடி
மாமதீனாடி வருஞ்சனங்கொண்டாடி
வரமதைநீடி
வடிவுடனமைந்தமுஹம்மதர்கவிபாடி (காமி

காதவழிவீசும் கஸ்தூரியின்வாசம்
தீதழியுந்தேசம் ஜகமக்காவில்வாசம்
செழித்திடுந்நேசம்
தினமுமவரைநினைவதுகொள் சென்றிடுந்தோஷம் (காமி

பூவில்மனம்நொந்து புழுங்கியுயிர்வெந்து
ஆவியுமெலிந்து அவதியாய்அலைந்து
அழுகுறேன் நைந்து
அதிவிரைவில் வரமருள்வீர் அஹமதர்வந்து (காமி

கூறினேனற்போதம் குருமொழிசங்கீதம்
பாரில்வெகுநீதம் பகரினோர்க்குசாதம்
பயகாம்பரின்சூதம்

பனுவல்றையுமுஹம்மத்கனி பங்கிலருள்நீதம் (காமி

16-வதுபதம் கியாம்த்ஹோரகி என்ற மெட்டு

கண்ணிகள்

ஹபீபே வந்தருள்தாரும் நபியே
மைந்தனைக்காரும் றசூலே
உங்கள்பொற்பாதம் பணிந்தேன்
இங்குநற்கீதம் (ஹபீபே

நபிமார் புகழும்நயினரே ஹலீமா
இனியசுதனரே கரீமா
னவனோடுரைவீரே அடிமைக்
குதவிசெய்வீரே (ஹபீபே

உங்கள் நிழலும்சாயாது தரையில்
கழலும்தோயாது புதுமை
மொழியும்மனுவேறு ஜகமீ
தொருவருமிலாது (ஹபீபே

மலக்குல் மௌத்துவந்தென்றன் னுயிரெ
வாங்கும்போதுந்தன் கலிமா
விளக்கும்ஹமீதெ திரு
மதினமஹ்மூதெ (ஹபீபெ

திருப்பேர் மாஹின்ஹாஷிருன் வஹீதுன்
ஆக்கிபுன்யாசீன் கொளிஞ்சி
முஹம்மத்கனிகீதம் இசைந்து
புகழநன்னீதம் (ஹபீபெ

17-வதுபதம் உடுமலையின்முத்துச்சாமிபாட்டை என்றமெட்டு

வள்ளல் மஹ்மூதரெவாரும் மிகத்
தள்ளும்பவங்களைத்தீரும் இணை

விள்ளும்குபிரோர்களைத்தள்ளஉதவிசெய்யக்
காரும் பரஞ் சாரும் (வள்ளல்

மங்கை ஆமினர்திருப்பாலா புகழ்
தங்குஞ்சதுர்மறையின்னூலா ஹஷீம்
வங்கிஷமதிலிலங்கும் சங்கை அப்துல்லாவின்புத்ர
சீலா கதீஜா லோலா (வள்ளல்

ஈத்தங்குலையழைத்த நாதா குறைஷ்
கோத்திரத்திலுதித்த வேதா குறை
தீத்தருள்நட்சேத்திரத்தின் காத்திரரைபூர்த்தியுடன்
தாதா தவ போதா (வள்ளல்

கானில்நதியை யழைத்தோரெ வன
மானின்பிணையாய்நின்றோரெ மண
நானமதுவீசிடதீனெனும் பயிர்விளைத்
தோரெ நயி னாரெ (வள்ளல்

மஹ்ஷரமளியில் மன்றாடி சேர்க்கும்
மஹ்மூதெனும்நபியைத்தேடி மனம்
மயங்கிவருந்திடயான் முஹம்மத்கனிகவியைப்
பாடி புகழ் நாடி (வள்ளல்

18-வதுபதம் சீதைமயிலெ என்றமெட்டு

பல்லவி

மையல்கொண்டு மறையைவிண்டு
மஹமூதருசை ஜகமீதிலுண்டு (மைய

அனுபல்லவி

மெய்யிதுதையலெ துய்யோன்ஹபீபை (மைய

சரணம்

வையகமீதவரின்மலரடி தோயாது
வாகுமிகுத்தவரும் வள்ளல் மஹ்மூது

துய்யோனனுப்பியநாதர்
துலங்குஞ்சதுர்மறைவேதர்
பையலபுகழும்நவனீதர்
பார்த்திபருனஹாமிதர் (மைய

மான்மதங்கமழ்ஜடலம் வாய்ந்த எங்கள்நயினர்
மன்னரப்துல்முத்தலிப்மைந்தர்பெருசுதனர்
மாதர்களேபுகழுவீர்
மாஹின்ஸலவாத்தைக்கூறுவீர்
தீதுகளோடக்கோருவீர்
ஜன்னத்திற்புகுதநேருவீர் (மைய

ஆதிபராபரனின்தூதவருனவரும்
அண்ணல் அஹம்மதெனும் புண்யநபிநாதரும்
ஓதுமுஹம்மத்கீதம்
ஒழுஙகுடன் படிக்கும்நற்போதம்
வாகுமயில்வடிவாரின்பாதம்
வணங்கும்படியானநன்னீதம் (மைய

19-வதுபதம் ஓரடி ஜகமோகனசுரூபமாது என்றமெட்டு

பல்லவி

அதிமோகமாகினேனிப்போது—இப்புவிமீது
அஹ்மதர்வரமிகவினாவுடனவைபெற (அதி

அனுபல்லவி

கதிபெறநிதமதில்ஹாமிதை நாடி
சதிமனமதுவிடுத்தேமதி கூடி
துதியொடுபதமலர்சிரமிசை சூடி
பதியினிலலைவொடுமேனிகள் வாடி (அதி

சரணம்

மாதாஆமினரீன்றமுதர் சதுர்மறையின்
வேதாகதமானநவநீதர் விளங்குமிறை
தூதாங்கருனதவபோதர் புகழ்மதீன
நாதாந்தாரமென்குருநாதர் ஹாஷீம்கிளையில்

வந்தேயுதித்தறசூலுவந்தேயென்மீதருள்வாய்கோனே
ஏழையின்மனம்

நொந்தேயிருதயமெலிந்தே யுருகுதுசீமானே
அதிவிரைவாய்
செந்தாமரைப்பதத்தைத்தந்தே யெனையாதரிதேனே
ஹாமிதுமானே
இன்றேயென்பாடல்கள் நவின்றேனுமதுபுகழ்யானே
அறபிகள்சூழ்
மக்கநகர்புக்குகுபிர்வெட்கிமனம்சொக்கியஞ்சிநாணி—பகைவர்களின்
தக்கசிரமற்றிடவெபக்கலடைவர்க்குமறைபூணி—அவ்ஹாபிமார்கள்
ஹக்கநிலைபெற்றிடவெசொர்க்கநிலையுற்றிடவும்பேணி—ஹபீபுல்லா
மேல்
இக்கவியுரைக்குமுஹம்மத்கனி வசிக்குநகர்காணி—கொளிஞ்சாம்
பாறை

வாசமுளதீனவர்களில்யானும்
ஆசையொடுதுஆகேட்பதைப்பூணும்
தோசமுளவவைதீர்ந்திடத்தானும்
நேசம்விடாதெனைக்காத்திடுநபிமேல் (அதி

20-வதுபதம் ஓசடி தாமசிக்காமல்சேரடி என்றமெட்டு

பல்லவி

தோஷமகற்றுவாரடி துரைநாதரடி (தோ

அனுபல்லவி

நேசமுடனேமனப் பாசமறவேதினம்
ஆசையுறவேகுண மாகவுறுதியுடன்
அஞ்சியெதொழுதுகொள்வாய் இறையிடம்
கெஞ்சியெதுஆவின்வாய் அஹ்மதர்
தஞ்சமென்றுரைபுகழ்வாய் கல்பினில்
சஞ்சலந்தனைத்தள்ளுவாய் (தோ

சரணம்

வானவரோதிடு மாதவமாகிய வேதியரெ எமதீதுகளோடிட
வந்தென்மீதருள்செய்திடுவாய்சுகாநந்தம்
பேரொளிமேவியகுருவிறசூலா
பொங்குஞ்சதுர்மறைநூலா
மங்கையராமினர்பாலா
கங்கையழைத்திடுசீலா குணமேலா
பறந்துமதியுமை வருந்தியிருதயம்

கரைந்தமனிதரின் முறிந்தகல்பது
விள்ளும் விள்ளும் விள்ளும் பவதுது
துள்ளும் துள்ளும் துள்ளும் ஜகமீ
தூற்றிடு குற்றமகற்ற விரட்டியெ நற்கதிபெற்றிடு
பொற்பதியதுபெற
பருகிப் பருகிப் பதமெனும் தேனை
பாடிடசணமதில் ஜில் ஜில் ஜில்லென
நாடிடுவார்நிதம் தேடிடுமடிமையான்
நத்தினேன் பித்தன்யானித் தரைமீதினில்
கத்தனருள்பெற சுத்தரஹ்மதர்
பதமலர்நிதமென்மனதிலெநாட
சதமெனமுஹம்மத்கனிகவிபாட (தோ

21-வதுபதம் ஓசடி வாயைத்திறந்துகொஞ்சம்பேசடி என்றமெட்டு

பல்லவி

மேகக்குடையின்மஹ்மூதரெ—கார் (மேக

அனுபல்லவி

சோகத்தினல்மெலிந்து சோப்பித்திரிந்தலைந்து
சோதனையுற்றென் மீதிறுகுற்றம்
ஓடிடபத்தன் மீதருள்புரிவீர் (மேக

சரணம்

மங்காதமாணிக்கம் மங்கைஆமினர்சுதா
மாதவபோதா மதியமைநீதா
தீதறவென்மீ தேயருள்வேதா
நாதா நவநீதா இறைதூதா மஹ்மூதா
நைந்தென்னிருதய நன்னெறிநாட
பைம்பொன்னஹ்மதர் பதமலர்கூட
இத்தனைநாள்வரைநத்தியலைந்து கத்தனருள்பெருமுத்தமரொன்று
ஹபீபிறசூலெனுங்காரணரெ அபூபக்ர்சித்தீக்மருமகரெ
கருதிக் கருதிப் பெருகிப் பெருகிப்
பிரியத்துடனிரு சரணடைவாக
காதலுங்கொண்டேன் நயினர்கீதம்
ஓதினேன்முஹம்மதுகனியின்போதம் (மேக

22-வதுபதம் வண்ணம் பூவருந்திருவெ என்றமெட்டு
வாடிமயங்கினனே மன நாடித்தியங்கினனே

மஹ்ற மூதராசையென் மீதுய்திடவேதாந்த
சற்குருநாயகரின் செம்பொன்
பாதமதுபணிந்தேன் பத மோதிடவேதுணிந்தேன்
பர ஞானமெளன வானவர்புகழ்
ஹாமீதிரசூலெனும் குருநபியைக்
காதல்கொண்டிடவெ ஈமானை யுண்டிடவெ
கவி பாடித்தேடி வாடியமனம்
நாடிக்கூடிக் குறைஷியோரின
மாதனதாயகமெ வே தாந்தநாயகமெ
மனு வாயுதித்த மஹ்மூதரெ
மயிலாயமைத்த அலிய்யுல்அலீமெனும்
ஏகபராபரனெ மே லானநாயகனே
துனி யாவையுமெழு வானமுமதில்
சேரும்ஆலங்க ளேபடைத்தது
நூருமுஹம்மதிலெ ஜக ஜோதிஹாமிதிலெ
ஒளி தாவியமதி ஞவினிற்சமா
தாகியபுருக் கானன்னீதர்மேல்
பண்புகள்பாடிடவெ பல துன்பங்களோடிடவெ
இப் பாவிமுஹம்மத்கனி யுரைக்குமண்
ணுவிறஊர்ரஹீமைத்தேடி (வாடி

23-வதுபதம் வண்ணம்கிளிகள்காடை என்றமெட்டு

இறை அடுஷிலேறி அறதினேடு புகழ்கள்கூறி வசனமாடு
மகீலமீதில் வருகும்தூதஹம்மதனுர்—இந்த
ஜகமதனில் புகலுந்தீன்முஹம்மதனுர்—உமை
சரணமதுசெய்திடவுமெமது மனமதுருகியிளகிதமும்
தஞ்சஞ்செய்செம்பொன்பதந்தாள்வாய்—மன
தஞ்சம்பண்கெஞ்சுங்கண்ணீய்ந்தாழுவாய் (இறை)
மதினமாநல் பதியைநாடி மனதுவாடி ஜகமிதோடி
வருவர்கோடிமானிடர்பொங்குஞ்சங்கமாம்—இறை
யருள்பெருகும் ஹாமிதுவெனுந்தங்கமாம்—துதி
புரியகருணைதருவீரெமது மதியுமதிகவிரிவதாகி
மன்றம்பொன்சங்கிதங்கொண்டாடுவேன்—நபியை
விண்டன்புங்கொண்டும்மைந்தன்பாடுவேன் (இறை
தருணமீது கருணையீய்த லெமதில்வாது புரிவதேது

சமயபாடிவருகுவீரபூத்தாஹிரே—கவி
புகலுமுஹ்ம்மத்கனிபுகழ்நாதரே—துதி
புரியஜனமினிருதயமது விழைவுபெருகிபடர்தலோடி
வந்துங்கள்பைம்பொன்பதந்தேடுவார்—பல
துன்பந்தவிர்க்கவுங்களைநாடுவார் (இறை

24-வதுபதம் வங்காரமார்பிலணி என்ற திருப்புகழ்மெட்டு

சிங்காரமானமதினநகரிலேயரசு
மங்காதமாலையணிமார்பர்புகழே தினமும்
சங்கீதஞானமொடுத்யானமுடையோர்புகலும்—மறையோரே
தந்தாழவேணுமிருபாதமிதுவேதருணம்
வந்தாழுவாயெனதுதீதகலவோதிடுவன்
சிந்தாதமாலைபுயமார்பர்மஹ்மூதரெனும்—துரைநீரே
மன்றுடினேனுமதுதாள்பணியுமேழைதுய
ரின்றேடுவாடிக்ஷணமோடிவிடநாடமனங்
குன்றுதென்மீதருளும்ஹாமீதெனும்நீதர்மறை—குருநாதா
வம்பானபாவியெனையாதரவுசெய்தினிதி
லன்பாயென்மீதுவரமேயருளும்நாதர்திருப்
பண்பாடுபாவலர்முன்னேதுமஹமூதுகனி—இறசூலே

25-வதுபதம் தொந்திசரியமயிரே என்ற திருப்புகழ்மெட்டு

மங்கைஆமினார்புதல்வாஎனதுபிழை
பொங்குங்கடலின்நுரைபோலிருந்திடினும்
தஞ்சமென்றுமைநம்பினேனடிமைக்கருள்—புரிவீரே
எந்தவிடமுமலைந்தேதிரிவதுடன்
எந்தன்மனமதுநொந்தேயுருள்படுது
எந்தன்துரையெவருவீர்துரிதமுடன்—விரைவாக
மண்டையுருகிவரும்நாளுதவிசெயும்
தொண்டன்பணியும்குருவெதுயரமதை
இன்றுமுதல்முடிவுமாயழித்துவிடும்—நயினாரே
கஞ்சமலர்ப்பதமதைக்கருதினிதம்
பண்சொல்முஹம்மத்கனிகவிபகரினன்யான்
தஞ்சமென்றுமைநம்பினேன்தயைபுரிவீர்—இறசூலே

ஸய்யிதுனாஷைகுமுஹயித்தீன் ஆண்டகைபேரிற்பாடிய
முனாஜாத்துப்பதம்.

26-வதுபதம் பாராமுகமேனையா என்றமெட்டு

பல்லவி

வாரும் அப்துல்காதிரே—விரைவுடனே (வாரும்

அனுபல்லவி

கூறும்திருநாமத்தால் தீரும்பவவினைகள்
தாரும்உங்கள்கடாட்சம் சேருமகிதலத்திற்
கண்டு—பெரியவருல் விண்டு—சிறியவனன்
தொண்டு—செய்வது எண்ணங் கொண்டுசித்தத்தில்வைத்தேன்

சரணம்

காட்சிபகுதாதினில் மாட்சிதங்கிய அர
சாட்சிகொளுதல்அகுலம் தாட்சண்யமானகுரு
நாதர்—விளங்குந்தவ போதர்—தத்துவம்பெரும்
சாதர்—புருக்கான்வேத நீதர்—தயவுடனே (வாரும்
கோனெஜய்லானிசீ மானெவரப்ரசாதங்
தானெயருள்புரிவாய் தேனெயமுர்தகவி
பாடி—அடிமையுமைத் தேடி—அலைந்துமிக
வாடி—அண்டவந்தேனெ நாடிதடையில்லாமல் (வாரும்
வாது இன்னஞ்செயவதா காதுமனஸ்தரபமென்
மீது வைத்திருப்பது ஏது முத்திதரவே
நீதம்—முஹமமதக்னி கீதம்—முடிவுபெரும்
போதம்—முஹயித்தீனின் நாதம்—விரும்பினன்யான் (வ

27-வதுபதம் அம்பிகாஉன்மகன்குகன் என்றமெட்டு

பல்லவி

துன்பமடைந்துவாடுகிறேன்
அன்பர்சுல்தானேநாடுறேன் (துன்ப

அனுபல்லவி

இன்ரானஷைகுனு எங்கள்முஹயித்தீனர்
நொம்பலமாகவேனுன் நொந்துவெந்துடல்மெலிந்து (து

சரணம்

தம்பிரான் அருஷினிலெ தங்கிய அப்துல்காதிரெ
ஐம்பமாயுங்கள்புகழை சாற்றிஏற்றிபோற்றினன்யான்
நாலுதசவருடமதில் நல்ஈஷாதொழுதொழுவில்
வாகுடனெபஜிர்தொழுது வந்தஎன்றன்ஏந்தலரியான் (து

ஆரைந்துநாள்வரையில அழகியரம்லான்பிரையில்
சீருடனெ அமுதருந்தும் தினமுமருந்தா திருந்தவலியெ
பாலன்முஹம்மத்கனி பனுவல்புகலவினி
நானடிமைஜப்லானி நாதநீதவேதபோதரெயான் (துன்ப

28-வதுபதம் அடங்காது அடங்காது என்றமெட்டு

பல்லவி

பகுதாது நகர்மீது பார்த்திபருனவராம் (பகு

அனுபல்லவி

மஹ்மூதுபேரவர் மயில்பாத்திமான்சுதர்
ஜகமீதப்துல்காதிரெ செப்பிமனமொப்பிநிதம
சிந்தையில்நாடு பதமூ வந்துநீபாடு தினமும்
சென்றிடுங்கேடு அனுதினம்
தீதிலாதநாதரான ஷைகைநீதேடு (பகு

சரணம்

ஆரிரண்டுவருடமட்டும் ஆழ்ந்துபோனகப்பல்தனை
சீருடனெவரவழைத்த ஷைகுகௌதுல் அகுலமவர்
சொல்நீதம்பாரு—பலபல இல்மில்நீதேரு—தினமுன்
கல்பினில்கோரு—புக
ழோங்கும்வலியார் தீங்ககற்றுவாருண்மையிற்கூறு (கு
ஈரிருபதுவிடுத்தம் இஹ்றத்திலமாகி அன்று
ஓரிரவுகுஸ்லும்செய்தீ ருண்மையடியெண்ணய்ந்துதரம்
உரையுமற்புதமெ—புகன்றேன் தரையிலித்தினமெ—பணிந்தேன்
ஒலியின்பொற்பதமெ—சிறந்து
ஓதுவேதஞானநீதரவரினுச்சிதமெ பகு
செத்தமனுடன்தனை ஜீவனுடன்எழுப்பிவைத்தீர்
கத்தனருள்பெற்றிடுநல் லுத்தமரென்குத்ரபாலியெ
கதியருள்வீரெ—அடிமைக் குதவிசெய்வீரெ—புகழும்
மதிநிகர்பீரெ—இம்
மானிலத்தில் முஹம்மத்கனிக்கு மதியருள்வீரெ (பகு

நாகூர் ஷாகுல்ஹமீதாண்டகைபேரில் முனுஜாத்துப்பதம்

29-வதுபதம் இனித்தடைசெய்தால்மோகம் என்றமெட்டு

கண்ணிகள்

நாகைநகரில்மேவும் ஷாஹீல்ஹமீதே—ஷா
தயங்குரேன்ஈதெ (நாகை

வேகமுடன்வந்தெனைக்காத்தருள்வீரெ—காத்தருள்
கதிதருவோரெ— (நாகை

ஆசையினல்மிகஒடியலைந்தேன் —ஒடியலை
வாடிமெலிந்தேன் (நாகை

காசைச்சுமந்துகலங்கியான்நொந்தேன்—கலங்கி
கதிபெரவந்தேன் (நாகை

நேசன்முஹம்மத்கனிகவிதொனீசீரெ—கவி
சதுர்மறையோரெ (நாகை

30-வதுபதம் மங்களம். பாளைவாய்கமுகில்வந்தூர் என்றமெட்டு

கண்ணிகள்

பூரணமதியழைத்த காரணர்நபிதமக்கு
பூர்த்தியுடன் நேர்த்தியார் நல்மங்களம்—அவர்
கோத்திரர்ஸஹாபிகட்கும் மங்களம் (பூரண

சார்மறையின்நேரதனை வேறுவேருகப்பிரித்த
நாலிமாம்கள்தங்களுக்குமங்களம்—அவரைச்
சீருடன் துடர்ந்தவர்க்கும் மங்களம் (பூரண

பொன்னுலவும்நன்பகுதாதன்னகரில்மின்னுமெங்க
ளண்ணல்முஹ்யித்தீனவர்க்கும் மங்களம்—நாகை
மன்னர்ஷாஹால்ஹமீதவர்க்கும் மங்களம் (பூரண

இன்னிலத்திலன்னைதந்தை என்னினுஸ்தாதுமார்தமக்கும்
இன்பமுமீன்முஸ்லிமோர்க்கும் மங்களம்—மிக
அன்புருமிச்சிந்திணிற்கும் மங்களம் (பூரண

சந்தமாயிச்சிந்ததனைச் சொந்தமுடன்பதிப்பித்த
கந்தமாம்பிரஸினிற்கும் மங்களம்—இதை
விந்தையாய்ப்படிப்பவர்க்கும்மங்களம் (பூரண

அரசருக்காசனேநின்னருள்முஹம்மத்கனியினுக்கு
அன்புடன்தந்துதவிசெய்வாய்நேயனெ—பல
துன்பங்கள்துடராமல்நீகார் தூயனெ (பூரண

வஸல்லல்லாஹு தஆலா வஸல்லம் அலாகைஹரிகல்க்கிஹி
ஸய்யிதினு முஹம்மதின்வஆலிஹிவ அஸ்ஹாபிஹி

அஜ்மஈன்

வல்ஹம்துலில்லாஹிரப்பில்ஆலமீன்

நவனீத முனுஜாத்துச் சிந்து முதற்பாகம் முற்றுப்பெற்றது.